**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>**

**<u>அ.வ.எண். 9/2015</u>**

பெயர் : வரதராஜன்

சாட்சி – பி.வா.சா–1 நாள்: 10.09.2024

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் நாள் சாட்சியம்.

---

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)</u>**

1. எனது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மற்றும் குறியீடு செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் நான் 2017 ஆம் ஆண்டு சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கானது என்றால் 2015, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் எடுத்துக் கொண்டதாகும். நான் கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் 17.4.2017 தேதியில் அனுமதிக்கப்பட்டு 20.4.2017 தேதியில் மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு செய்யப்பட்டேன் என்றால் சரிதான். 20.4.2017 தேதியில் கோவையில் எனது உறவினர் பாலசுப்ரமணியம் என்பவரிடம் பிசியோதெரபி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 24.4.2017 தேதியில் விடுவிப்பு செய்யப்பட்டேன் என்றால் சரிதான்.

2. நான் கண் சிகிச்சைக்காக காலையில் அனுமதிக்கப்பட்டு மாலையில் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். கோவை ஹார்ட் ஆஞ்சியோ சென்டரில் காலையில் சென்று மருத்துவ பரிசோதனைகள் முடித்து மாலையில் வீடு திரும்பி உள்ளேன் என்றால் சரிதான். தற்போது எனது வயது 65 ஆகும். சாதாரணமாக எனது வயதிற்கு உரிய வயோதிக பிரச்சனைகளுக்காகத்தான் நான் அவ்வப்போது சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல.

3. நான் எந்த காலத்திலும் தொடர்ச்சியாக மருத்துவமனையில் பல மாதங்கள் பல வருடங்கள் என்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்ததில்லை என்றால் நாட்கணக்கில் இருந்துள்ளேன். நான் மருத்துவமனையில் தொடர்ச்சியாக 15 நாட்களுக்கு மேல் இருந்ததில்லை என்றால் சரிதான், நான் வீட்டில் தான் ஓய்வில் இருந்துள்ளேன். வா.சா.ஆ.7 புகைப்படங்களில் காணப்படுகின்ற கட்டிடங்கள் வாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல.

4. வாதி தனக்கு என்ன சொத்துக்கள் உள்ளன என்பது குறித்து தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பட்டியலை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்குத் தரவில்லை. நான் எனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அடங்கிய பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். நான் ஆரோக்கியமாக நல்ல உடல் நிலையில்தான் உள்ளேன் என்றும், வழக்கிற்காக எனக்கு உடல்நிலை சரியில்லை என்று நீதிமன்றத்தின் பரிதாபத்தை தேடி கொள்வதற்காக தற்சமயம் ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. நான் தற்போதும் தோட்டத்தில் இறங்கி மண்வெட்டி எடுத்து வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றும், வாதி கோரி உள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.09.10 18:14:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.